**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

**அசல் வழக்கு எண்.544/2024** **நாள்- 28.11.2025**

**வா.சா.1. தர்மலிங்கம்**

**குறுக்கு விசாரணை பிரதிவாதி தரப்பில்**

வழக்கு தாக்கல் செய்வதற்கு என் தகப்பனார் தான் விவரம் சொன்னார். நானும் உடன் சென்றிருந்தேன். நிரூபணவாக்குமூலத்திற்கு நான்தான் விவரம் சொன்னேன். என் தகப்பனாருடன் உடன் பிறந்தவர்கள் பெரியசாமி, என் அப்பா பொன்னுச்சாமி, 2 ம் வாதி மீனாட்சியம்மாள், 3 ம் பிரதிவாதி செம்புலிங்கம் ஆகியோர்கள் ஆவார்கள். என் தாத்தா பெயர் சுப்பையா நாடார். வீரமாகாளியம்மள் என்பது என் பாட்டி அப்பாவின் அம்மா ஆவார். வீரமாகாளியம்மாளுக்கு அவர் பெயரில் சொத்துக்கள் உண்டு என்றால் சரிதான். தாவா வழக்கில் 1, 2 பிரதிவாதிகள் என் பெரியப்பா பெரியசாமி வாரிசுகள் என்றால் சரிதான். வழக்கில் என் அப்பா என்ன பரிகாரம் கேட்டுள்ளார் என்று எனக்கு தெரியும். என் பெரியப்பா பெரியசாமியின் வீட்டிற்கு தென்புறமாக என் பாட்டிக்கு பாத்தியப்பட்ட வீடுகள் உள்ளது என்றால் சரிதான். அந்த வீடு 1986 ம் வருடம் என் பெரியப்பா என் அப்பா என் பாட்டி ஆகியோர்கள் பாகம் செய்த போது அந்த வீடு என் பாட்டி பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. என் தாத்தாவிற்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் எங்கெங்கு உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்று கேட்டால் தாவா சொத்துக்கள் மட்டும் தெரியும். வேறு சொத்துக்கள் உண்டா என்று நான் கேள்விபட்டதில்லை. என் தாத்தாவிற்கு கலிங்கள் புஞ்சை இருந்தது தெரியும் கூட்டாம்புளி புஞ்சை என் அப்பா, பெரியப்பா மற்றும் சித்தப்பா ஆகியோர்கள் சேர்ந்து கிரையம் பெற்றது. அரசனேரியில் கண்மாயில் நஞ்சை நிலம் உண்டா என்று எனக்கு தெரியாது. 1986 ம் வருடம் என் அப்பா, என் பாட்டி, என் பெரியப்பா மற்றும் சித்தப்பா ஆகியோர்கள் சேர்ந்து கூட்டாக உள்ள சொத்துக்களை வாய்மொழியாக ஊர் பெரியவர்கள் முன்பாக பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்று சொன்னால் தெரியாது. பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையை நான் படித்து பார்த்துள்ளேன். எதிர்வழக்குரையில் 1986 ம் ஆண்டு வாய்மொழியாக பாகம் பிரிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டு கூறப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அதன் பிறகு நான் பாகம் நடந்தது பற்றி விசாரிக்கவில்லை. புத்தூர் கிராமத்தில் என் பெரியப்பாவிற்கு ஒதுக்கிய சொத்தில் என் அப்பா என் பெரியப்பா வகையறாவிடமிருந்து கடந்த 01.09.2008 ம் தேதியில் சேத்தூர் சார்பதிவக அலுவலக ஆவண எண்.2092/2008 படி கிரையம் வாங்கியுள்ளார் என்று சொன்னால் சரிதான். அந்த கிரையப்பத்திரத்தில் என் பெரியப்பா பாதி சொத்து பூர்வீகமாகவும் பாதி சொத்து கிரையமூலமும் பாத்தியப்பட்டது என்றும் குறிப்பிட்டுள்ளார்கள் என்றும் அதன் பின்பு வாய்மொழியாக ஏற்படுத்தப்பட்ட

கிடைத்த சொத்து என்று குறிப்பிட்டு கிரையம் கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் எனக்கு தெரியாது. அந்த கிரைய ஆவணத்தை எதிர்வழக்குரை தாக்கல் செய்த பின்பு நான் படித்து பார்த்துள்ளேன். அந்த ஆவணத்தை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. அந்த ஆவணம் எங்கள் வசம் உள்ளது என்று கேட்டால் இல்லை. அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் எங்கள் வழக்கிற்கு விரோதமாக இருக்கும் என்ற காரணத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அந்த ஆவணத்தில் கண்டுள்ள விசயங்களை என் தகப்பனார் ஒப்புக் கொண்டு கிரையம் பெற்றுள்ளதால் வாய்மொழி பாகம் ஏற்பட்டது என்பதை என் தகப்பனார் ஒப்புக் கொள்ள வேண்டிய நிலை ஏற்படும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. கலிங்கள் புஞ்சையின் மொத்த விஸ்தீரணம் 96 செண்ட் ஆகும். அந்த 96 செண்டில் விவசாயம் செய்யப்படவில்லை என்றால் சரிதான். அந்த 96 செண்ட் நிலத்தில் 3ம் பிரதிவாதி 17 செண்டை 4ம் பிரதிவாதி குமாரசாமிக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரிதான். அந்த விவரம் நகல் எடுத்த பின்பு தான் தெரியும். 3ம் பிரதிவாதி செம்புலிங்கத்திற்க்கு பாத்தியப்பட்ட வீட்டுமனையை மணி என்பவருக்கு கடந்த 2007ம் வருடம் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. நாங்கள் குடியிருக்கும் வீடு, பெரியசாமி வாரிசுகள் குடியிருக்கும் வீடு, 3ம் பிரதிவாதி குடியிருந்த வீடு அடுத்தடுத்து இருந்தது என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி செம்புலிங்கம் குடியிருந்த வீட்டில் யார் குடியிருக்கிறார்கள் என்று எனக்கு தெரியாது. 3ம் பிரதிவாதியிடம் இருந்து கிரையம் பெற்ற நபர் குடியிருந்து வருகிறார் என்றும் நான் ஒப்புக் கொண்டால் எங்கள் வழக்கிற்கு விரோதமாக அமையும் என்பதால் தெரியாது என்று மறுக்கிறேன் என்றால் சரியல்ல. குடியிருப்பு வீடுகளின் சர்வே எண் எனக்கு தெரியாது. நான் குடியிருக்கும் வீட்டின் கதவு எண், என் பெரியப்பா குடியிருக்கும் வீட்டின் கதவு எண் எனக்கு தெரியாது. என்னுடைய நிரூபணவாக்குமூலத்தில் நான் குடியிருக்கும் வீட்டின் கதவு எண் காட்டப்படவில்லை என்றால் சரியல்ல. என் தகப்பனார் தாக்கல் செய்த பிராதில் வீட்டின் கதவு எண்ணும் பிரதிவாதி வீட்டின் கதவு எண்ணும் காட்டப்பட்டுள்ளதா என்று எனக்கு தெரியாது. 1வது இலக்க சொத்தில் 2வது இலக்க சொத்து வடக்கு பக்கம் அமைந்துள்ளது. அந்த 17 செண்டின் கிழமேல் தென்வடல் நீளம் எனக்கு தெரியாது. 96 செண்ட்க்கு நான், நான்கு மால்கள் பிராதில் காட்டப்படவில்லை என்றால் சரிதான். 17 செண்டிற்கு கிழக்கு பக்கம் 3ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட இடம் உள்ளதா என்று எனக்கு தெரியாது. 17 செண்டில் காட்டப்பட்டுள்ள நான்கு மால் விவரத்தில் என் அப்பா பெயரோ, என் பெரியப்பா பெயரோ காட்டப்படவில்லை என்றால் சரிதான். 17 செண்டின் நான்கு மாலில் என் தாத்தா சுப்பையா நாடாரின் வாரிசுகளுக்கு பாத்தியப்பட்ட இடம் இருப்பதாக காட்டப்படவில்லை என்று சொன்னால் சரிதான். நான் தையல் வேலை 20 வருடமாக தளவாய்புரத்தில் செய்து

வருகிறேன். தளவாய்புரத்திற்கும் புத்தூருக்கும் சுமார் 5 கி.மீ தூரம் இருக்கும். 3 ம் பிரதிவாதியிடம் இருந்து 4 ம் பிரதிவாதி கிரையம் பெற்ற பின்பு செங்கல்சூளை வைத்துள்ளார் என்று சொன்னால் சரிதான். செங்கல் சூளை வைத்து சுமார் 15 வருடங்கள் இருக்கும் என்றால் எனக்கு தெரியாது. செங்கல் சூளைக்கு அருகில் எங்களுக்கு தாத்தா சொத்து இருப்பதாக என் அப்பா கூறியுள்ளார். செங்கல் சூளைக்கு ஆழ்துளை கிணறு, மின் இணைப்பு உள்ளதா என்று சொன்னால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1-ன் படி என் தாத்தா சுப்பையா நாடார் 1970 ம் ஆண்டு இறந்ததை 2019 ல் ஆண்டில் தான் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த இறப்பை காலதாமதமாக பதிவு செய்ததற்கான காரணம் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2-ல் சர்வே எண்.231/3 சின்னச்சாமி நாடார் மகன் பெரியசாமி என்று காட்டப்பட்டுள்ளது என்று கேட்டால் என் அப்பாவின் தாத்தா பெயர். வா.சா.ஆ.2-ஐ பெறும் வரை அந்த சொத்திற்கான பட்டா மாறவில்லை. சர்வே எண்.231/3 தற்போது உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதா என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ.3. லும் வாய்மொழியாக பாகம் பிரித்து கொண்டதில் கிடைத்த சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.3- கிரையம் முடித்த ஒரு வருட காலத்திற்குள் 4 ம் பிரதிவாதி செங்கல் சூளை வைத்துவிட்டார் என்றால் சரிதான். 4 ம் பிரதிவாதி செங்கல்சூளை வைத்து அனுபவம் செய்து வந்த பின்பு தான் என் அப்பா வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். வழக்கறிஞர் அறிவிப்பிற்கு 3 ம் பிரதிவாதி தரப்பில் பதில் அறிவிப்பு அனுப்பிய விவரம் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.7, 8 ஆவணங்கள் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மற்றும் ஆவணங்கள் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. என் தாத்தா சுப்பையாவிற்கு பாத்தியப்பட்டபூர்வீக சொத்துக்கள் மற்றும் இதர சொத்துகள் அனைத்தையும் என் அப்பா, பெரியப்பா, சித்தப்பா 1986 ம் ஆண்டே வாய்மொழியாக பாகம் செய்து கொண்டார்கள் என்றும் அந்த பாகப்பிரிவினையின் படி கிடைத்த சொத்துக்களை தனித்தனியாக அனுபவித்து வருகிறார்கள் என்றும், அவ்வாறு பாகம் பிரித்ததை ஒப்புக் கொண்டு என் அப்பா கிரையம் பெற்றுள்ளார் என்றும், 3 ம்

பிரதிவாதி, 4ம் பிரதிவாதிக்கு வாய்மொழி பாகத்தின் படி கிடைத்த சொத்தை கிரையம் கொடுத்துள்ளார் என்றும், தாவா சொத்து ஒருபோதும் கூட்டனுபவத்தில் இல்லை என்றும், நாங்கள் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் தவறானது என்றும் எனவே நான் கோரும் பரிகாரங்கள் எங்களுக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.

**4 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
இராஜபாளையம்.